**R 5294 (page 248)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்

## "THE SPIRITS OF JUST MEN MADE PERFECT"

"பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்துசேர்ந்தீர்கள்." - எபிரெயர் 12:22-23

"நீதிமான்களின் ஆவிகள்" பூரணமாக்கப்படும் காலக்கட்டத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்றும் அப்போஸ்தலர் கூறுகின்றார். இவ்வசனத்தில் அப்போஸ்தலர் முதலில் முதற்பேறானவர்களின் சபையின் அங்கங்கள் அனைவரையும் குறிப்பிட்டுவிட்டு, வசனத்தின் இறுதியிலும் சபையின் இன்னொரு பகுதியினரை குறிப்பிட்டிருப்பார் என்று நாம் யூகிப்பது சரியாக இருக்காது; ஆகையால் இந்த சொற்றொடர் இன்னொரு வகுப்பாரைக் குறிப்பிடுகின்றது என்ற முடிவுக்கு நாங்கள் வருகின்றோம். நாம் ஆராய்கையில் இயல்பாகவே நமது மனமானது, சபை மகிமையடையும் வரை காத்துக்கொண்டிருக்கும் முற்பிதாக்கள் வகுப்பார்மேல் செல்கின்றது. இப்படியாக இவர்கள் இங்கே வரிசையில் வருகின்றார்கள்; ஆகையால் முதற்பேறானவர்களாகிய சபையின் கூடிவருதலைக் கூறிய பிறகு, பரிசுத்த பவுல் அடிகளார் மற்றொரு வகுப்பாராகிய "பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவியை" பற்றிக் கூறுகின்றார். இங்குச் சபை குறிப்பிடப்படவில்லை என்றும், முற்பிதாக்கள்தான் குறிப்பிடப்படுகின்றனர் என்றும் கூற இன்னொரு காரணம் உண்டு; அதென்னவெனில் சபையும் சரி, திரள்கூட்டத்தாரும் சரி "பூரணராக்கப்பட்ட ***மனுஷர்களாக***" ஆக்கப்படமாட்டார்கள். சபை மனுஷீக சுபாவத்தை விட்டுவிடுவதினாலேயே, ஆவிக்குரிய வகுப்பாராக மாற முடிந்தவர்களாய் இருக்கின்றனர்.

ஆனால் எப்படி இந்தச் சொற்றொடரை முற்பிதாக்களுக்கு நாம் பொறுத்தலாம்? நாம் இந்தச் சொற்றொடரின் வார்த்தைகளைப் பின்வருமாறு இடம் மாற்றுகின்றோம்: "நீதிமான்களின் ஆவிகளை உடைய பூரண மனிதர்கள் விஷயத்திற்கு நாம் வருகின்றோம்" என்பதேயாகும். முற்பிதாக்கள் மாம்சத்தில் அபூரணமாக இருந்தாலும், நீதிமான்களாக இருந்தார்கள். அப்போஸ்தலர் இந்த வகுப்பாரையே குறிப்பிட்டுள்ளார்; இவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெறுவார்கள் என்றும் கூறுகின்றார்; ஆனால் சபையைப்போல் உன்னதமான உயிர்த்தெழுதலைப் பெறமாட்டார்கள். முற்பிதாக்கள் கல்லறையிலிருந்து எழுந்துவரும்போது, பூரணப்படுத்தப்பட்ட மாம்சத்தில் வரும் விதத்தில் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெறுவார்கள். இவர்கள் ஆவியில் நீதிமான்களாக இருப்பதினால், திரும்பக்கொடுத்தலின் காலங்களுடைய துவக்கத்தில் பூரண மனுஷராக இருப்பார்கள்.

---